Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 66 கர்த்தாவே, என் சத்துருக்கள் எவ்வளவாய் பெருகியிருக்கிறார்கள்; எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள் அநேகர் சங்.3:1 நவம்பர் 2020 No.11

மனந்திரும்புவதற்காகக் கிறிஸ்துவின் அவசர அழைப்பு

Christ's urgent summon to repentance

H.A. Ironside

பரிசுத்த வேதாகமத்தில் காணப்படும் இறுதிப் புத்தகம் வெளிப்படுத்தின விசேஷம். அதில் இந்தக் காலத்தைக் குறித்தும் வருங்காலத்தைக் குறித்தும் எழுதப்பட்டுள்ளது. உச்சக்கட்டமாக தேவன் மனிதனிடம் நடந்து கொள்ளும் விதம் மற்றும் நன்மை தீமைக்கு இடையிலான நீண்ட முரண்பாட்டினால் ஏற்படும் நித்திய விளைவுகள் நம் கண்களுக்கு முன்பாகக் கொண்டு வரப்படுகின்றன. மறுபடியும் வரப்போகிற ஆண்டவரின் சத்தம் வானத்தில் கேட்கபடுவதற்கு முன்னால் மானிடருக்கு சொல்லப்படும் கடைசி வார்த்தைகள் இங்கே காணப்படுகின்றன. அவர் வரும்போது மீட்கப்பட்டவர்கள் ஆகாயத்தில் சேர்க்கப்பட்டு தமது வல்லமையால் தேவராஜ்யத்தை ஸ்தாபிப்பார். இதற்காகவே முக்கியமாக மனந்திரும்புவதற்கான அழைப்பு கொடுக்கப்படுகிறது. ஏழு சபைகளுக்கு எழுதப்பட்ட நிருபங்களில் மனந்திரும்புவதற்கான அழைப்பு ஏழுமுறை கூறப்பட்டுள்ளது. நான்கு முறை மனந்திரும்பாதவர்களின் இழப்பு எடுத்துக்கூறப்படுகிறது.

மக்கள் இன்று இப்புத்தகத்தை வாஞ்சையோடு படித்து இந்த நாட்களில் வேதனைகளுக்கான விளக்கத்தையும் வரப்போகிற காலத்தின் வெளிச்சத்தையும் கண்டுகொள்ள முயற்சிக்கிறார்கள். ஏழு சபைகளுக்கும் எழுதப்பட்ட நிருபங்கள் யோவான் காலத்தில் வாழ்ந்தவர்களுக்கு செய்திகளை தருவது மட்டுமல்ல அதற்குள் மறைவான தீர்க்கதரிசன கருத்துக்களையும் கொண்டது என்று பலர் நம்புகின்றனர். அவை உலகில் அப்போஸ்தலர் காலத்திலிருந்தே சபையின் நிலையை முடிவுகாலம் வரை எல்லைக் குறியிட்டு அழகாகக் காண்பிக்கின்றன.

ஆனால் இந்தக் கடிதங்களில் ஆண்டவர் கிறிஸ்தவ காலகட்டங்களில் சபைகள் என்னென்ன நிலைகளில் காணப்படலாம் என்பது ஆராய்ந்து அறியப்பட்டுள்ளது.

எபேசு சபை பாரம்பரிய சபையாயிருந்தாலும் ஆதியிலிருந்த அன்பை அது விட்டுவிட்டது. சிமிர்னா சபை பாடுகள் வறுமை போன்றவற்றின் மத்தியிலும் கிறிஸ்துவுக்காக உண்மையாக பாடனுபவிக்கிற சபையாயிருந்தது. பெர்கமு லௌகீக சபையாயிருந்தும் உபதேசங்களில் பிழையற்றதாயிருந்தது. எனினும் பிலேயாமுடைய போதகம், நிக்கொலாய் மதஸ்தரின் போதகம் போன்றவை அங்கு காணப்பட்டன. தியத்தீரா சபை அன்பும் விசுவாசமுமுடையதாயிருந்தும் வேசித்தனமும், விக்கிரகங்களோடு தொடர்பும் வைத்திருந்தது. ஒரு சிறு கூட்டத்தினர் இதனை வெறுத்தாலும் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. சர்தை சபையில் தங்கள் வஸ்திரங்களை கறைப்படுத்தாதவர்களுமிருந்தனர். பிலதெல்பியா சபை வேதத்தின்படி நடந்து அவரை கனப்படுத்திய தாயிருந்தது. லவோதிக்கேயா சபை வெதுவெதுப்பானது. கிறிஸ்து வெளியே நிற்பதாகக் காணப்படுகிறது.

எல்லா சபைகளைக் குறித்தும் ஆண்டவர் சொல்லும் பொதுவான ஒரு காரியம், "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்" என்பதாகும் *2:2*. அவரது ஆராய்ந்து பார்க்கும் கண்களுக்கு மறைவானது ஒன்றுமில்லை. ஒவ்வொரு கடிதமும் ஒரே ஒழுங்கில் எழுதப்பட்டுள்ளன. முதலில் அந்த சபைக்குப் பொருத்தமான முகவரி கூறப்படுகிறது. இரண்டாவதாக அதன் நிலைமை விளக்கப்படுகிறது. மூன்றாவதாக எச்சரிப்பு கூறப்படுகிறது. நான்காவதாக ஜெயம் பெற்றோருக்கான வாக்குத்தத்தமும் கவனிக்க வேண்டியவைகளும் குறிப்பிடப்படுகின்றன.

ஏழு சபைகளில் ஐந்து சபைகள் மனந்திரும்புவதற்கான அழைப்பு கொடுக்கப்படுகிறது. சிமிர்னா சபையும் பிலதெல்பியா சபையும் கண்டிக்கப்படவில்லை. மற்ற ஐந்து சபைகளுக்குச் சொல்லப்பட்டவைகளை கவனிப்போம்.

எபேசு சபையில் ஆதியிலிருந்த அன்பு குறைந்தது

எபேசு சபை ஆதியிலிருந்த அன்பை விட்டதற்காக கடிந்து கொள்ளப்பட்டது. தத்துவங்களைக் குறித்து பெருமை பாராட்டியது இந்த சபை. உபதேசத்தில் தனது அந்தஸ்து உயர்ந்தது என்ற பெருமையிருந்தாலும் ஆவியின் கனியாகிய அன்பு வெளிப்படவில்லை. கொள்கையில் நிலையாயிருந்தாலும் அன்பை உதாசீனப்படுத்துவது கர்த்தருக்குப் பிரியமானதல்ல. சகோதர அன்பும் கிறிஸ்துவைப் போன்ற மனதுருக்கமும் வேண்டும். "ஆகையால் நீ இன்ன நிலையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து மனந்திரும்பி ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாத பட்சத்தில் உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன்" வெளி.*2:7*. ஒரு குறிப்பிட்ட நபர் மட்டுமல்ல ஒரு காலத்தில் சாட்சியாயிருந்த ஒரு சபை அதன் சாட்சியை இன்று இழந்து நிற்பது ஆபத்தானது.

உபதேசத்தில் மட்டும் சரியாயிருப்பது சுவிசேஷ ஒளி பிரகாசமாக எரியச் செய்ய முடியாது. தூய ஆவியானவரால் தேவ அன்பு நம்மில் ஊற்றப்படுவதால் மட்டுமே நமது வார்த்தைகள் மற்றவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட முடியும். "நீங்கள் உரத்த சத்தமாய்ப் பேசுவதால் நீங்கள் பேசுவதை நான் கேட்க முடியவில்லை" என்று Emerson ஒருமுறை கூறியிருக்கிறார். அது போலவே கிறிஸ்துவின் சாயலற்ற சபையின் செய்திகளை உலகம் செவி கொடுத்துக் கேட்பதில்லை. எனவே மனந்திரும்புதல் மிக அவசியம். அபிப்பிராயங்களில் மாற்றம் மட்டுமல்ல, ஆதியில் செய்த கிரியைகளும் செய்யப்பட வேண்டும். சுயதிருப்திக்கான மூட நம்பிக்கைகளை விட்டுவிட்டு ஆரம்ப காலத்தின் அன்பிற்கும் உத்தமத்திற்கும் திரும்ப வேண்டும். அப்போது ஆண்டவரைப் பிறர் அறிந்துகொள்ள பாடுபடவும் உழைக்கவும் முன்வருவோம். அதே அழைப்பு எச்சரிப்போடு இன்று அனேகருக்குக் கொடுக்கப்படுகிறது. நொறுங்கிய உள்ளத்தோடும் பாவ அறிக்கையோடும் அவரிடம் வராவிட்டால் விளக்குத்தண்டு எடுத்துக் கொள்ளப்படும். நாம் அந்தகார உலகில் சாட்சியாய் பயனுள்ளவர்களாயிருக்க முடியாது.

பாவத்திற்கு விட்டுக்கொடுப்பது

பெர்கமு சபையின் நிலை இதை விடக் கீழானது. தீமைகளுக்கு இடமளிக்கப்பட்டு, பரிசுத்தமற்ற உறவுகள் உருவாக்கப்பட்டு அவர்கள் சேவிக்கிற தேவனை கனவீனப்படுத்துகிறார்கள். இப்படிப்பட்டவர்களும் மனந்திரும்ப அழைப்பு கொடுக்கப்படுகிறது. "நீ மனந்திரும்பு இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து என் வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம் பண்ணுவேன்" வெளி.*2:16*. தனது

(4-ம் பக்கம் பார்க்க)

முக்கிய அறிவிப்பு

ஒவ்வொரு மாதமும் 10-ம் தியதிக்குள் பத்திரிகை வரத் தவறினால் உடனே எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்
மொபைல் : 95432 21008
வாட்ஸ்ஆப் : 94897 40295

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

இம்மாத பொன்னான சிந்தனை

மன்றாட்டு ஜெபம்

மன்றாட்டு ஜெபம் மற்ற ஜெபங்களைவிட வேறுபட்டது. அது சிறு பிள்ளை ஒன்று தகப்பனிடத்தில் தன் தேவைகளைக் கேட்கும் ஜெபத்தைப் போன்றது அல்ல. அது தேவ இரக்கத்தை மக்கள் பெறும்படியாக திறப்பின் வாசலில் நிற்கிற ஜெபம். அது மக்களின் அவலநிலையைக் குறித்த மிகுந்த இரக்கம் கரிசனை மற்றும் பாரத்தோடு ஜெபிப்பது. அது தேவனுக்கு முன்பாக இதயத்தை தண்ணீரைப் போல ஊற்றிவிடுவது. அது உணர்ச்சிகளையும் துக்கத்தையும் வெளிப்படுத்தும் கண்ணீரோடும் பெருமூச்சோடும் வேண்டுவது.

வாக்குத்தத்தம்

நீங்கள் சம்பூரணமாகச் சாப்பிட்டு, திருப்தியடைந்து, உங்களை அதிசயமாய் நடத்தி வந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள்; என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை யோவேல் 2:26.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2020 நவம்பர் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், தாழ்மையுடனும் துதிக்கிறேன். வழக்கம்போல இம்மாதமும் **3** காரியங்களை உங்களோடே பகிர்ந்து கொள்கிறேன்.

I. ஆறுதலின் தேவன்

தஞ்சாவூர், 08.08.2020

அன்புள்ள ஆசிரியருக்கு, என் அன்பான தோத்திரங்கள்.

கடந்த ஜூலை மாத இதழில் வாசகர்களின் கடிதமாக என் கடிதத்தை வெளியிட்டிருந்தீர். நன்றி ஐயா! அக்கடிதத்தில் என் மனைவிக்காக, வேண்டுதல் எழுதியிருந்தேன். நீங்களும் ஜெபித்தீர்கள். ஆனால் ஆண்டவரின் சித்தமோ வேறுவிதமாக இருந்தது. என் மனைவி கடந்த ஏப்ரல் 5-ம் தேதி இறைவனடி சேர்ந்தார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுடைய ஆன்மா சாந்தி அடையவும் எங்களுக்கு ஆறுதல் கிடைக்கவும் இறைவனிடம் வேண்டிக் கொள்கிறேன்.

கடந்த இரண்டு மாத இதழிலும் கொரோனாவினால் ஏற்பட்ட விளைவுகளைப் பற்றி எழுதியிருந்தீர்கள். இந்த இக்கட்டான நாட்களில் உங்களுக்கு ஆதரவாக ரூ.3,000-ஐ (Cheque) ஆக அனுப்பியுள்ளேன். அன்பாக பெற்றுக்கொண்டு எங்களுக்காக தொடர்ந்து ஜெபித்துக் கொள்ளுங்கள். நானும் உங்கள் ஊழியத்திற்காக ஜெபிக்கிறேன். நன்றி.

இப்படிக்கு, M.R.S., TJ 00020 Y

* * * * *

Praise the Lord

Chennai, 28.09.2020

அன்புள்ள சகோதரர் Wesley Devadason அவர்களுக்கு இன்ப இயேசுவின் நாமத்தில் எங்கள் குடும்பத்தின் சார்பாக அன்பான வாழ்த்துக்கள். சென்னையில் வசித்து வருகிறேன். என் மகன் பெயரில்தான் எங்களுக்கு வருகையின் தூதன் பத்திரிகை வந்து கொண்டு இருக்கிறது.

எங்களது விவாகத்திற்கு முன்னதாகவே (1963) என் மனைவி வருகையின் தூதன் பத்திரிகையை 1955-ம் ஆண்டில் இருந்து படித்துக் கொண்டு வருகிறாள். கடந்த 2018-ம் ஆண்டு நவம்பர் மாதம் 24-ம் தேதி என் மனைவி கர்த்தருடைய ராஜ்யத்தில் சேர்ந்து கொண்டாள். எனது மனைவி உங்களது பத்திரிகையின் பேரிலும், ஊழியங்களின் பேரிலும் மிகவும் கரிசனை உள்ளவள். கடந்த சில ஆண்டுகளாக உங்களது உபவாச ஊழியத்திற்காக ரூ.5000/- அனுப்பிக்கொண்டு வந்தோம். ஆனால் கடந்த ஆண்டு இந்த பணத்தை தவிர்க்க முடியாத சில காரணங்களால் அனுப்ப முடியாமல் போய் விட்டது.

கர்த்தருடைய பெரிதான கிருபையால் இன்று என் மனைவி ஞாபகார்த்தமாக ரூ.5000 உங்கள் உபவாச ஊழியத்திற்காக அனுப்பி இருக்கிறேன். கர்த்தருக்கு சித்தமானால் இனிமேல் ஒவ்வொரு வருடமும் தவறாமல் இந்த பணத்தை உங்களுக்கு அனுப்ப கிருபை தர வேண்டும். தயவு செய்து ஜெபம் செய்து கொள்ளுங்கள். என்னுடைய குடும்பத்தில் என் மகன், மருமகள், பேரன், பேத்தி இருக்கிறோம். தயவு செய்து எங்கள் குடும்பத்திற்காக ஜெபம் செய்யும்படி மீண்டும் ஒருமுறை அன்புடன் கேட்டுக்கொண்டு இக்கடிதத்தை முடிக்கிறேன்.

கர்த்தருக்குள் அன்பு சகோதரன், D.J.S.

* * * * *

வேத புஸ்தகம் கூறும் உண்மைகளில் சிலவற்றை மாத்திரம் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

முதலாவது சத்தியம் :

"பின்பு, பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம் பற்றுகிறார் என்று சொல்லிற்று" வெளி.14:13.

And I heard a voice from heaven saying unto me, write, Blessed are the dead which die in the LORD from henceforth; Yea, saith the spirit, that they may rest from their labours; and their works do follow them.

இரண்டாவது சத்தியம் : முதலாவது உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை வெளி.20:6.

கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது : கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்த வர்களுக்கு முந்திக்கொள்வதில்லை.

ஏனெனில் கர்த்தர் தாமே ஆதவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது **கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.**

பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்

(3-ம் பக்கம் பார்க்க)

- **கடிதங்கள், மணியாடர்கள்** அனுப்பவேண்டியமுகவரி **வருகையின் தூதன்,** நியூபோர்ட்தெரு,நாகர்கோவில்-629001
  VARUKAYIN THOOTHAN, Newport Street, Nagercoil-629 001.
  Mobile: 95432 21008, 9489740295, **e-mail:**varukayinthoothan@hotmail.com
- **காசோலை** *(Cheque & Draft)* **வெஸ்லி தேவதாசன்** என்ற பெயருக்கு மட்டும் அனுப்பும்படி அன்பாய் கேட்கிறேன்.
- **வங்கி** வழியாய் காணிக்கை அனுப்புவோர் (Net Banking) தயவாய் உடனே எங்களுக்கு SMS அனுப்புங்கள், அல்லது அலுவலக செல் நம்பர் **95432 21008** வழியாக தெரிவியுங்கள்.

பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
United Bank of India, Mead Street, Ngl-1 IFSC Code : **UTBI0NGLP05**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
I.O.B., Court Road, Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Syndicate Bank, W.C.C. Road, Ngl-1 IFSC Code : **SYNB0006182**

(2-ம் பக்க தொடர்ச்சி)

கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் **எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்.**

ஆகையால் இந்த வார்த்தை களினாலே நீங்கள் **ஒருவரையொருவர் தேற்றுங்கள்** *1 தெச.4:15-18.*

மூன்றாவது சத்தியம் : நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகல விதமான ஆறுதலின் தேவனுமாயிருக் கிறவருக்கு ஸ்தோத்திரம்.

தேவனால் எங்களுக்கு அருளப் படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திர வத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணி யுள்ளவர்களாகும்படி எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்.

எப்படியெனில் கிறிஸ்துவினு டைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறது போல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது *2 கொரி.1:3-5.*

"**மரணத்திற்குப் பின்.....?**" என்ற சிறு புத்தகத்தின் முன்னுரையை இங்கே அச்சிடுவது ஆண்டவருடைய பிள்ளை களுக்கு ஆறுதலாயிருக்கும் என்று எண்ணுகிறேன்.

முன்னுரை

சில ஆண்டுகளுக்கு முன் என் தாயின் அடக்க ஆராதனையை நானே நடத்தினேன். ஆராதனைக்குப் பின்னால் பல நண்பர்கள் என்னண்டை வந்து, உங்கள் தாயின் அடக்க ஆராதனையை நீங்கள் எப்படித்தான் நடத்தினீர்களோ? உங்கள் அன்னையை நீங்கள் வெகுவாய் நேசித்ததை நாங்கள் அறிவோம். அவ்வாறிருக்க, அவர்கள் பிரிவால் உங்கள் உள்ளமே புண்பட்டு, உங்கள் இதயத்தி லிருந்து இரத்தம் வடிந்து கொண்டி ருக்கும்போது, பீடத்தில் ஏறிப் பிறரை ஆறுதல்படுத்த உங்களுக்கு எவ்வாறு துணிவு வந்தது? என்றெல்லாம் வினவினர். மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்க்கை யைக் குறித்துத் தூய வேதம் கூறுப வற்றை நான் அவ்வாறே விசுவாசிப்ப தால்தான் இவற்றை யெல்லாம் என்னால் செய்யக் கூடியதாகிறது என்றே நான் அவர்களுக்குப் பதிலிறுத்தேன்.

இரட்சிக்கப்பட்டவர்களுக்கா னாலும், இரட்சிக்கப்படாதவர்களுக்கா னாலும், மரணத்திற்குப்பின் எத்தகைய வாழ்க்கை காத்திருக்கிறது என்பதைக் குறித்த சத்தியங்களை வேதம் திட்ட வட்டமாகக் கற்பிக்கிறதைப் பலரும் அறியாது போகின்றனர். இத்தகைய சத்தியங்களை மக்கள் அறியும்போது அவர்களுடைய வாழ்க்கையில் சிறந்த தொரு மாற்றம் ஏற்படும் என்பதில் ஐயமில்லை. எடுத்துக்காட்டாக, இரட் சிக்கப்படாத மக்களின் வருங்கால நிர்ப்பந்த நிலையைக் குறித்துத் தெளி வாகச் சிந்திக்கும் ஒவ்வொரு விசுவாசியும் அழிந்துபோகும் ஆத்துமாக்களை ஆதாயம் செய்யாது அமர்ந்திருக்க முடியாது. அது போன்றே தேவனுடைய பிள்ளைகள் பெறப்போகிற வருங்கால பாக்கியத்தைக் குறித்த அறிவு, சோதனை நேரத்திலும் குறிப்பாக மரணவேளை யிலும் அவர்களை ஆறுதல்படுத்தும்.

மரணத்துக்குப் பின்னுள்ள வாழ்க்கையை குறித்து சிந்திப்பதில் சமயத்தை செலவிடுவது அறிவீனம் எனப் பலரும் எண்ணுகின்றனர். ஆனால் நண்பரே, இவ்வுலகில் நாம் செலவிடும் சமயத்தைக் காட்டிலும் பன்மடங்கு சமயத்தை நாம் மறுமையில் செலவிடப் போகிறோம். அத்தகைய இடத்தைக் குறித்து நாம் சிரத்தையோடு சிந்திக்க வேண்டாமா?

வேதவாக்கியங்கள் மறுமையின் வாழ்வைக் குறித்து மிகவும் தெளிவாகக் கூறுகின்றன. ஆகவே, தேவனுடைய எல்லா ஆலோசனைகளையும் மக்களுக்கு அறிவிக்க ஆசிக்கிற உண்மையுள்ள தேவ ஊழியர் யாவரும் மறுமையின் வாழ் வைக் குறித்துத் தேவன் வெளிப்படுத்தி யுள்ள சகல சத்தியங்களையும் விளக்க மாகவும் வெளியரங்கமாகவும் கூறி அறிவிக்கக் கடமைப்பட்டவர்கள்.

இந்நோக்கோடுதான் மறுமை யின் வாழ்வைக் குறித்து வேதம் கற்பிப்ப வற்றை இப்புத்தகத்தின் வாயிலாக எடுத்துக்கூற நான் முனைந்துள்ளேன்.

பண்டிதர் இ.ஜே.டானியல்ஸ்

* * * * *

எனது தகப்பனார் காலஞ்சென்ற பாஸ்டர் **S.தேவதாசன்** அவர்கள் எழுதிய **ராஜாதிராஜா** முதலாம் பாகம் என்ற புஸ்தகத்திலிருந்து ஒரு பகுதியை கீழே அச்சிடுகிறேன். **(இதனை "நித்திய அக்கினி"** Everlasting Fire **என்ற தொடர் கட்டுரையில் அச்சிட வேண்டுமென்று எண்ணியிருந்தேன்)**

மரணம் நெருங்கி, கண்கள் இம்மைக்கு மூடி மறுமைக்குத் திறக்கும் இறுதிவேளையில்தான் மனிதன் தெய்வீக சத்தியங்களைத் தெளிவாய் அறியக்கூடும். ஆகவே, ஆவிக்குரிய உண்மைகளை அறிந்து கொள்வதற்குரிய சிறந்த வழிகளில் ஒன்று மரண வேளையில் மக்கள் கூறியிருப்பதைக் கவனிப்பதேயாகும். முதலில் உலகப் பிரசித்திபெற்ற மூன்று நாஸ்திகரின் மரணமொழியைக் கேட்போம்.

"நான் தேவனாலும் மனிதனா லும் கைவிடப்பட்டேன். நான் நரகத் துக்கே போவேன். ஆ கிறிஸ்துவே, ஆ இயேசு கிறிஸ்துவே!" வால்டையர் (Voltire)

"நான் எழுதிய பகுத்தறிவின் காலம் (Age of Reason) என்னும் **(நூத்திக்)** நூல் பிரசுரிக்கப்படாதிருக்குமானால் நான் உலகங்களையே **(எனக்கிருந்தால்)** அதற்கீடாகக் கொடுப்பேனே. ஆண்ட வரே எனக்கு உதவி செய்யும். என்னோ டே தங்கும், தனிமையாய் விடப்படுவது நரகமே" டாம் பேயின் (Tompaine).

"**அவியாத அக்கினியின் உபாதை யை ஆயிரம் ஆண்டுகள் அனுபவித்தாவது ஆண்டவரின் கிருபையைப் பெற்று அவரண் டை திரும்பக் கூடுமானால் நலமாயிருக்குமே. ஆனால் அது வீண் நம்பிக்கை. கோடாகோடி ஆண்டுகளும் என் வேதனைக்கு முடிவுண்டாக் காதே. நித்தியமே, ஆ நித்தியமே, நரகத்தின் தாங்கமுடியாத வேதனைக்கு முடிவே யில்லையே**" சர் பிரான்சிஸ் நியூபோர்ட்.

ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவனோடு ஒப்புர வாக்கப்பட்டவர்களின் மரண மொழி களோ அதிசயமானவை.

"இப்பொழுது எனக்கு மாத்திரம் பெலன் இருக்குமானால் மரிப்பது எத்தனை இன்பமானது என்று எழுது வேன்" டாக்டர் கல்லன்.

"இது மரணமா? ஆ! இது ஜீவிப் பதைக் காட்டிலும் மேன்மையுள்ளதாய் இருக்கிறதே! நான் கிறிஸ்துவுக்குள் சந்தோஷமாய் மரிக்கிறேன்" ஜான் ஆற்தர் லித்.

நான் அனுபவிக்கும் ஆனந் தத்தை உங்களுக்கு அறிவிக்கக் கூடுமா னால் நலமாயிருக்குமே! நான் ஆனந்த பரவசமடைகிறேன். ஆண்டவர் என் ஆத்துமாவில் மகிமையாய்ப் பிரகாசிக் கிறார். அவர் வந்துவிட்டார், வந்து விட்டார்" மிஸிஸ் மேரி பிரான்ஸெஸ்.

மனச்சாட்சி உள்ள மனிதன் உணர்ந்து கொள்வதற்கு இவையே போதுமானவை. "துன்மார்க்கரில் ஒருவ னும் உணரான், ஞானவான்களோ உணர்ந்து கொள்ளுவார்கள்" தானி.12:10 "தேவன் இல்லை என்று மதிகேடன் ..... சொல்லிக்கொள்ளுகிறான்" சங்.53:1.

* * * * *

II. அனுபவ சாட்சி

Dear brother in Christ

தாங்கள் மாதம் தோறும் எனக்கு அனுப்பும் "**வருகையின் தூதன்**" பத்திரி கைக்காக மிகவும் நன்றி கூறுகிறேன். அது என் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு மிகவும் பிரயோஜனமாக உள்ளது. இப்பத்திரிகை மூலமாக தாங்கள் செய்து வரும் சுவிசேஷ பணிகளுக்காக காணிக்கை ரூ.500/- மணியாடர் மூலம் அனுப்பியுள்ளேன், பெற்றுக்கொண்டு கடிதம் போடுங்கள். எனது பதிவு எண் TC 1140.

நன்றி, Mrs. J.J.

III. ஆண்டவருடைய ஊழியம்

"என்னை பலப்படுத்துகிற நம்மு டைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென் றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத் தினபடியால் அவரை ஸ்தோத்தரிக் கிறேன்" *1 தீமோ.1:12.*

"இந்த ஊழியம் குற்றப்படாத படிக்கு, நாங்கள் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல், எவ்விதத்தினா

(8-ம் பக்கம் பார்க்க)

ஒரு குறிப்பிட்ட நபர் மட்டுமல்ல ஒரு காலத்தில் சாட்சியாயிருந்த ஒரு சபை அதன் சாட்சியை இன்று இழந்து நிற்பது ஆபத்தானது.

(1-ம் பக்க தொடர்ச்சி)

பிள்ளைகள் என்று சொல்லுகிறவர்கள் அக்கிரமம் செய்தால் அவர்களை நியாயந் தீர்க்காமல் இருக்க முடியாது. கிருபையால் இரட்சிப்பைப் பெற்றவர்கள் பாவத்தில் தொடர்ந்தால் அவர் சகிப்பதில்லை. வாயின் பட்டயம் என்பது அவரது வசனம், அந்த வசனம் தெய்வீகத்தில் நடப்பது போல காண்பித்துக் கெண்டு அசுத்தமாயிருப்பவர்களுக்கு எதிரானது.

இதைவிட வேறு செய்தி இன்று தேவையா? இன்று சபைகள் சாத்தானின் சிம்மாசனத்தின்மேல் சொகுசாக, உலகத்தை விட்டும் பிரியாமல் சொகுசாயிருக்கிறது. மனந்திரும்புதல் இன்றியமையாதது.

தியத்தீராவின் வெட்கமற்ற ஒழுக்கமின்மை

தியத்தீரா சபையைக் குறித்து நாம் பார்க்கும்போது அது தேவனுடைய சபையா என்று எண்ணும் அளவுக்கு அதன் நிலை காணப்பட்டது. ஆனாலும் அது கர்த்தருடைய சபை என அழைக்கப்பட்டது. ஆயினும் சாதாரண மரியாதைக்கும் குறைவாகவே அதன் செயல்பாடுகள் காணப்பட்டன. ஒரு காலத்தில் அதில் அன்பும் பயபக்தியும் அசாதாரணமாக உயர்நிலையில் காணப்பட்டன. ஆயினும் விழுந்த நிலைக்காக மனம் வருந்தி புலம்பியதும் சாரத்தை இழக்காததுமான ஒரு பகுதி அங்கு காணப்பட்டது.

இன்னும் அத்தகைய சபைகள் இல்லையா? கிறிஸ்தவ சமுதாயங்களில் அறிந்து செய்யும் பாவங்களுக்கு இடமளிக்கப்பட்டு அவை கழுகப்படாமலிருக்கின்றன. ஐசுவரியமும் அந்தஸ்தும் தீமை செய்கிறவர்களுக்குத் துணையாயிருப்பதால் முழு சபையுமே நிராகரிக்கப்படும் நிலையிலுள்ளன. சபை ஆசீர்வதிக்கப்பட பரிசுத்தமற்ற பழக்கங்கள் அகற்றப்படுவது அவசியம்.

தியத்தீராவில் வெளிப்படையான பயங்கரமான துன்மார்க்கம் இருந்தது. பரிசுத்தம் என்ற பாவனையில் இயற்கையை வணங்குகிறவர்கள் காணப்பட்டார்கள். பொல்லாத அரசியேசபேல் இவ்வித ஃபொனீஷிய விக்கிரக வணக்கத்தை இஸ்ரவேலுக்குக் கொண்டு வந்து இணைத்ததால் யெகோவாவின் ஆராதனை தணிக்கப்பட்டது 1 ராஜா.16:30-33. இது எவ்வாறு பாவம் சபையில் நுழைகிறது என்பதைக் காண்பிக்கிறது.

தீமை அளவுக்கடங்காமல் பெருகிய போது, "அவள் மனந்திரும்பும்படியாய் அவளுக்குத் தவணைகொடுத்தேன்; தன் வேசி மார்க்கத்தை விட்டு மனந்திரும்ப அவளுக்கு விருப்பமில்லை. இதோ நான் அவளைக் கட்டில் கிடையாக்கி அவளுடனே விபசாரஞ்செய்தவர்களைத் தங்களுடைய கிரியைகளை விட்டு மனந்திரும்பாவிட்டால் அவர்களையும் மிகுந்த உபத்திரவத்திலே தள்ளி." வெளி. 2:21-22. மனந்திரும்பினால் ஆசீர்வாதம் பெறலாமென்று குறிப்பாக தெரிவிக்கப்படுகிறது. துக்கப்படுத்தப்பட்ட ஆவியானவர் இன்னும் பொறுமையுடனிருக்கிறார். இன்று சபைகள் இந்த அழைப்பினை ஏற்று பொல்லாதவழிகளை விட்டுவிட்டு உத்தம மனந்திரும்புதலோடு கீழ்படிந்தால் எழுப்புதல் ஏற்பட்டு உலகுக்கு சாட்சியாக மறுபடியும் எழும்பமுடியும்.

சர்தை சபையில் தெய்வீக வாழ்வின் இழப்பு

சர்தை சபையில் இன்னொருவித மான நிலைமை நிலவுகிறது. வெளிப் படையாக எந்தத் தீமையும் தென்படவில்லை. ஆனால் குளிர்ந்ததும் மாமூலானதுமான நிலையிருந்தது. ஆவிக்குரிய மரணத்தை இது காண்பிக்கிறது. ஒரு காலத்தில் அது கிறிஸ்துவுக்காக பற்றியெரிந்த சபை. எனவே அதற்குக் கொடுக்கப்படும் கண்டிப்பு, "நீ கேட்டு பெற்றுக் கொண்ட வகையை நினைவுகூர்ந்து, அதைக் கொண்டு மனந்திரும்பு, நீ விழித்திராவிட்டால் திருடனைப் போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும் வேளையை அறியாதிருப்பாய்" வெளி.3:3.

எழுப்புதல் நாட்களில் சபைகளில் சத்தியத்தின் ஒளி கூடர்விட்டதுடன் அங்கத்தினர்களும் உற்சாகமும் வல்லமையுமுடையவர்களுமாயிருந்தனர். ஆவியினால் நிறைந்த ஊழியத்தால் ஆத்துமாக்கள் மீட்கப்பட்டு விசுவாசிகள் எழுப்பப்பட்டனர். எனவே சபைகள் சுற்றிலுமுள்ள மக்களுக்கு ஆசீர்வாதத்தின் மையங்களாயிருந்தன. கொஞ்சம் கொஞ்சமாக இந்நிலை மாறியது. ஜீவனுள்ள வல்லமையினிடத்தை சடங்காசாரம் பிடித்துக்கொண்டது. ஆவிக்குரிய உற்சாகமிருந்த இடத்தில் குளிர் வந்துவிட்டது. முற்கால வேத போதனைகள் மறைந்து சாதாரண வகுப்புகள் நடைமுறைக்கு வந்து விட்டன. ஆத்துமாக்கள் பேரிலிருந்த வாஞ்சை தணிந்து சுயநோக்கு மலிந்துவிட்டது.

நிச்சயமாக ஒரு மனந்திரும்புதல் ஏற்பட்டு சுவிசேஷ ஊழியங்கள் வளர வேண்டும். **காலியான ஜெப அறைகள் நிரப்பப்பட வேண்டும். சபைகள் முழங்காலில் நிற்க வேண்டும். உள்ளங்கள் நொறுங்க வேண்டும்.** அப்போது தேவன் பரலோகப் பலகணிகளைத் திறந்து வரண்ட நிலத்தின் மேல் தூய ஆவியானவரை மழையாகப் பொழிவார்.

தேவனே! உமது கிரியையை எழுப்பும்
மரணத்தூக்கத்தைக் கலைத்து
தமது வல்லமையின் சுவாசத்தால்
அணைந்த கொள்ளியை எரியச்செய்யும்

உத்தம மனந்திரும்புதல் மட்டுமே இவ்வாறு கிரியை செய்ய முடியும்.

ஆவிக்குரிய உற்சாகத்தின் இழப்பு

வெதுவெதுப்பான சபையாகக் குறிப்பிடப்படுவது லவோதிக்கேயா சபை. குளிரிலிருந்து அனலுக்குச் செல்லும் நிலையாக அல்லாமல் அனலிலிருந்து குளிருக்கு இறங்கி வரும் வெதுவெதுப்பான நிலை. இது எளிதில் ஏற்படக்கூடிய நிலை. உத்தம ஆவிக்குரிய உற்சாகம் இழந்து போகாமலிருக்க நமது பெலவீனங்களை உணர்ந்து கொள்வதும், அதிகமாக ஜெபிப்பதும், ஆத்தும ஆகாரமாகிய வேதவசனத்தை அதிகமாகப் படிப்பதும் அவசியமாகும். தனி தியானம் புறக்கணிக்கப்படும்போது, நாம் இந்நிலையை அடைவதும் அதனால் சபையும் வெதுவெதுப்பாகிவிடுவதும் சாத்தியமானவை. இந்த நிலை கண்டிக்கப்படத் தக்கது என்று அந்த சபை அறியாதிருந்தது. இஸ்ரவேலரைக் குறித்து ஓசியா "நரைமயிரும் அவனில் தெளித்திருக்கிறது, அவனோ அதை அறியான்" ஓசி.7:9 என்று சொன்ன வார்த்தைப் பொருத்தமாயிருக்கிறது. சிம்சோனின் பலம் அவனிடத்திலிருந்து எடுக்கப்பட்டதை அவன் அறியாதிருந்தது போலவே இச்சபையுமிருந்தது. பின்வாங்குதல் சிறிது சிறிதாக தேவனை விட்டு தூரப்படுத்தினால் கண்டிப்பு மூலமாகவே உணர்வடையச் செய்யும். எனவே விழிப்புடனிருப்பது மிகவும் அவசியம்.

விசுவாசிதான் தேவனோடு உறவை இழந்தும் சிலகாலம் தான் ஐசுவரியமாயிருப்பதாகவும் தனக்கு எதுவும் தேவை இல்லையென்றும் பெருமை பாராட்டிக் கொண்டிருக்கலாம். ஆனால் தேவன் அவனது குறைவை கவனித்துக் கொண்டிருக்கிறார். அவரது கிருபையால் சோதனைகளையும் துன்பங்களையும் அனுப்பித் தன் பக்கமாக இழுக்க முயற்சிக்கிறார். "நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்து கொண்டு சிட்சிக்கிறேன். ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பு" வெளி.3:19. தீமை எங்கு ஆரம்பித்தது என்பதை உத்தமமாக சோதித்துப் பார்த்து தேவனிடம் திரும்ப வேண்டும். அவர் வாசலுக்கு வெளியே நின்று தட்டிக் கொண்டேயிருக்கிறார். நல்மனம் பொருந்த விரும்பி நிற்கிறார். நம்மில் பெருமையும் முரட்டாட்டமும் இருக்குமட்டும் அவர் வெளியேதான் நிற்பார். "ஆனாலும் சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன்" ஏசா.66:2. அவருக்குப் பயந்து அவரது சத்தியத்தைப் பற்றிக் கொள்கிறவர்களை அவர் நேசித்து அவர்களில் வாசம் பண்ணுகிறார்.

இயேசு தமது சீஷர்களிடம், "ஒருவன் என்னிடத்தில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தை கைக்கொள்ளுவான். அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம் யோவா.14:23. நாம் வாசம் பண்ண ஒரு வாசஸ்தலத்தை உண்டுபண்ண அவர் சென்றிருக்கிறார். இதற்கிடையில் இந்த வனாந்தர உலகில் வாழும் நம் இருதயத்தில் வாழ ஆசைப்படுகிறார்.

ஆண்டவரை கதவுக்கு வெளியே வைத்திருப்பது எவ்வளவு வெட்கம்! "என் சகோதரியே, என் பிரியமே, என் புறாவே, உன் உத்தமியே! கதவைத் திற. என் தலை பனியினாலும், என் தலை

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

மயிர் இரவில் பெய்யும் தூறலினாலும் நனைந்திருக்கிறது" உன்னத.5:2 என்ற மணவாளனின் சத்தத்தைக் கேட்காத நிலை. சோம்பலாலும், சாக்குப்போக்காலும் கதவு திறக்கப்படாத பரிதாபம்.

எனவே விழித்தெழுவது அவசரம். காலம் கடைசி. பிந்திப்போகு முன்னதாக எழுந்து செயல்பட வேண்டும். இல்லாவிடில், "அவள் மனந்திரும்பும்படி அவளுக்குத் தவணை கொடுத்தேன்; ..... மனந்திரும்ப அவளுக்கு விருப்பமில்லை" வெளி.2:2 என்று சொல்ல நேரிடும்.

இருதயங்கள் கொழுந்துவிட்டு எரியட்டும்

உண்மையாக மனந்திரும்பின சபைக்கு அவர் என்ன செய்வார்? கர்த்தரிடம் அன்புடன் கூடிய பயபக்தியால் பற்றி எரியும். அப்போது ஏராளமான ஆத்துமாக்கள் கர்த்தரிடம் சேர்க்கப்படுவார்கள்.

"எங்களில் தூய வாஞ்சையைத் தூண்டுவீராக

முற்காலத்தில் அவ்வாறு உமது ஜனங்களில் நடந்ததே

அவர்கள் உமது அன்பை மதித்து அவர்கள் இருதயங்கள் உமது அக்கினியால் எரிந்ததே

அவர்கள் பொறுமையுடன் அதற்காகக் காத்திருந்தார்களே"

வெதுவெதுப்பான சபை வல்லமையற்றது. இரட்சிக்கப்படாத வர்களை சபைக்குள் வர எந்த சாட்சியும் அதனிடமில்லை. ஆனால் கிறிஸ்துவின் மீது ஊக்கமான அன்புடைய சபை வல்லமையுடையதாக தேவனற்றவர்களையும் கடினமானவர்களையும் தேவனிடத்தில் சேர்க்கும். சபைகள் மனந்திரும்புதலுக்காக அழைப்பைக் கவனிக்கும்போது பாவிகள் திரளாக சபைக்குள் சேர்க்கப்படுவார்கள்.

மனுஷ குமாரனாக வந்த தேவகுமாரன் மாம்ச களைப்புடனிருந்ததைக் காண்கிறோம். ஆனாலும் அது களைப்பு மட்டுமல்ல அவரது நம்பிக்கையின் சிகரம். தாம் பிதாவின் பத்திரமான கரங்களிலிருக்கிறோம் என்ற நிம்மதி, கொந்தளிக்கும் கடல் அலைகள் தமது பிதாவின் உள்ளங்கைகளில் இருக்கிறது என்ற உறுதி. எல்லாம் சர்வ வல்லவரின் பலத்த கரங்களுக்குள் இருக்கின்றன என்ற திட நம்பிக்கை. இந்த நம்பிக்கையுடன் அவர் அமைதலாகத் தூங்கினார் சங்.127:3-ன் படி "அவரே தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார்"

நமது ஒரே நம்பிக்கை

சீஷர்கள் திறமைமிக்கப் படகோட்டிகள்; பலமுறை புயல்களை சந்தித்தவர்கள். இந்தக் கடலுக்கும் புயலுக்கும் பழக்கமானவர்கள். ஆனால் இந்த நாளின் புயல் வித்தியாசமான தாயிருந்தது. புயலின் கோரம் மிக அதிகமாயிருந்தது. அவர்கள் முயற்சிகள் பயனளிக்கவில்லை. எனவே இயேசுவை எழுப்பியே ஆகவேண்டும். நடுங்கிக் கொண்டிருந்த சீஷர்கள் இயேசுவை எழுப்புகின்றனர். நமது நம்பிக்கை அவர் ஒருவரே.

இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோமா? இயேசுவை அழைப்போம். அவரை நோக்கிக் கூப்பிடுவோம். அவர் பாதத்தில் முழங்கால்களை முடக்குவோம். சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னால் பிளாரன்ஸ் நகரிலுள்ள ஒரு பெரிய தேவாலயத்தின் இரத்த சாட்சிகளின் முன்னோடியான **சவோனரோலா** என்பவர் இவ்வாறு பிரசங்கித்தார். "பெரியோரே, விசுவாசத்தின் ஒளி மங்கிக் கொண்டே போகிறது, சபையின் ஆத்துமா அழிந்து கொண்டிருக்கிறது, ஆண்டவரின் ஆட்சி தாழ்த்தப்படுகிறது. அவிசுவாச அலைகள் ஓங்கி எழும்புகின்றன. துன்ப அலைகள் வேகமாய் எழும்புகின்றன. நாம் என்ன செய்வது?" என்று கதறினார் அவர். உடனே சபை மக்கள் அனைவரும் ஒரே குரலில் "இயேசுவை எழுப்புவோம்" என பல முறை முழங்கினர். அங்கு எழுப்புதல் ஏற்பட்டது.

இத்தகைய ஒரு நிலைக்கு நாம் வந்திருக்கிறோமா? அரசியல் குழப்பங்கள் மேலிட்டு நமது நம்பிக்கை இழக்கச் செய்து தேவராஜ்யத்தின் மீதுள்ள நமது காட்சிகளை உடைக்கின்றனவா? இந்தத் திகிலும் குழப்பமுமான நிலையில் நாம் செய்யவேண்டியது கிறிஸ்து இயேசுவை அழைப்பது ஒன்றே. அவரே செயல்பட வேண்டியவர், அவரை அழைப்போம். கண்ணீரோடு ஜெபிப்போம். அவர் தூங்கவில்லை. "வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும். உன் காலைத் தள்ளாடவொட்டார், உன்னைக் காக்கிறவர் உறங்கார்" சங்.121:2-3. "இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை, தூங்குகிறதுமில்லை" சங்.121:4.

(6-ம் பக்கம் பார்க்க)

வாழ்க்கை புயல்களை சமாளிப்பது எப்படி

Coping with Life's Storms

James S. Stewart

வேதபகுதி : மாற்கு 4:35-41.

நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா?

தனிப்பட்ட வாழ்விலும் அனைத்துலக வாழ்விலும் பல்வேறு புயல் அலைகள் ஏற்படும்போது நாம் இப்படி கேள்வி எழுப்புகிறோம். இவ்வுலகைப் படைத்த தேவன் இத்தகைய சூழல்களில் செயல்படாமலிருந்தால் உலகம் செய்ய வேண்டியதென்ன? அல்லது தனிப்பட்ட நபர்கள் தங்கள் வாழ்வின் கொடிய புயல்களின் போது செய்யவேண்டியது என்ன? நமது கூப்பிடுதல்களுக்குப் பதில் வராதபோது நாம் என்ன செய்ய வேண்டும்?

இச்சம்பவத்தில் சீஷர்கள் புயலில் அகப்பட்டுக் கொண்டார்கள். அவர்கள் தங்கள் எஜமானாகிய இயேசுவின் கட்டளைப்படிதான் பிரயாணம் பண்ணினார்கள். இயேசுதான் முதல்முதலாக அந்தப் படகில் கால் வைத்திருந்தார். அவர்தான் இப்பிரயாணத்தின் ஆலோசகராயிருந்தார் "அக்கரைக்குப் போவோம் வாருங்கள்" மாற்.4:35.

புயல் வர இருக்கிறது. இன்று இரவிலே இந்தப் பிரயாணம் வேண்டாம் என்று இயேசு சொல்லியும் சீஷர்கள் துணிந்து இப்பிரயாணத்தை ஆரம்பித்திருந்தால் அவர்களது கீழ்ப்படியாமைதான் காரணம் என்று நாம் கூறலாம். ஆனால் இயேசுதானே அவர்களை அழைத்தார். பின்பு ஏன் இந்தப் புயல் ஏற்பட வேண்டும்!

நமது நற்குணம், நேர்மை ஆகிய வற்றால் நாம் புயலுக்கு விதி விலக்காயிருக்க முடியாது. கிறிஸ்தவனோ, கிறிஸ்தவ தேசமோ அல்லது ஒரு சீஷனோ எதிர்சூழலை சந்தித்துதான் ஆகவேண்டும்.

ஒரு தேசம் தேவனுக்கும் அவரது சித்தத்திற்கும் எதிராக நடந்து கொண்டால் கொந்தளிப்பு ஏற்படும் போது பராது சொல்ல இடமில்லை. "மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் (தேசம்) எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்."

இந்த சம்பவமோ வித்தியாசமானது. இந்தப் பிரயாணத்திற்குக் காரணமாயிருந்தவர் இயேசுவே. அவருக்குக் கீழ்ப்படிந்து தான் சீஷர்கள் படகை ஓட்டினார்கள்.

இங்கு ஒரு சத்தியத்தை நாம் காண்கிறோம். "நம்முடைய கடமைகளிலும் சீஷத்துவ பணியிலும் கூட நாம் புயல்களை சந்திக்க வேண்டியதிருக்கலாம். நமது நற்குணம், நேர்மை ஆகியவற்றால் நாம் புயலுக்கு விதி விலக்காயிருக்க முடியாது. கிறிஸ்தவனோ, கிறிஸ்தவ தேசமோ அல்லது ஒரு சீஷனோ எதிர்சூழலை சந்தித்துதான் ஆகவேண்டும்.

கிறிஸ்து இவ்வுலகில் நம்மைப் பாதுகாப்பதற்காக மட்டுமல்ல நாம் அவரை உத்தமராய்ப் பின்பற்றவும் எதிர்பார்க்கிறார். நமக்கு முன்னால் கடந்து சென்ற பக்தர்களின் பாதைகளை கவனிப்போம். பவுல், பேதுரு போன்ற ஊழியக்காரர்கள் தங்கள் வாழ்வில் நீரோவால் கொலைசெய்யப்பட்டனர். இயேசு நம்மைத் துன்பப் பாதைகளின் வழியாகவே கடந்து செல்ல நடத்துகிறார். எனவே அவர் கரை சேர்ப்பார் என்ற நம்பிக்கையுடன் பிரயாணம் செய்ய வேண்டும்.

கிறிஸ்துவின் கரங்களில் நம்பிக்கை

சீஷர்கள் படகைக் கட்டுப்படுத்த முயற்சிக்கிறார்கள். இயேசுவோ நித்திரை செய்து கொண்டிருந்தார்.

(5-ம் பக்க தொடர்ச்சி)

தேவன் கரிசனையுள்ளவரா?

"நாங்கள் மடிந்து போகிறது உமக்குக் கவலையில்லையா?" என்பது சீஷரின் கேள்வி. வெட்கப்பட வேண்டிய ஒரு கேள்வி. ஆனால் காலாகாலமாக இந்தக் கேள்வியை நாமும் கேட்க வில்லையா? வாழ்க்கையில் புயல்கள் நம்மீது மோதி, தீமைகள் நம்மைச் சூழ்ந்து கொள்ளும்போது இப்படிக் கேட்கிறோமா?

மரணத்தை தழுவிக் கொண்டி ருந்த போர்வீரன் ஒருவனை ஆஸ்பத்தி ரியில் சந்தித்த ஊழியரிடம் அவன் கேட்ட ஒரே கேள்வி 'தேவன் கரிசனை யுள்ளவரா?' என்பது.

நல்ல ஒரு கிறிஸ்தவன் அவனண் டையில் வாழும் நாஸ்திகன் தெய்வீகத் தை மறுத்து வாழுகிறான். இதைக் காணும் கிறிஸ்தவனின் கேள்வி 'தேவன் கரிசனையுள்ளவரா?'

தன் எதிர்கால ஆசைகளெல்லாம் தனர்ந்து தூள் தூளாகிப் போன மனிதன் கேட்கிற கேள்வி 'தேவன் கரிசனை யுள்ளவரா?'

காலம் முழுவதும் நோயினால் பாதிக்கப்பட்டு நம்பிக்கையிழந்து போன ஒரு பெண்ணின் கேள்வியும் 'தேவன் கரிசனையுள்ளவரா?'

"நிர்பந்தமான மனுஷன் நான், யார் என்னை மரண சரீரத்திலிருந்து விடுவிக்கக்கூடும்?" என்று பாவத்தின் பாரத்தால் இளைத்துப் போன ஒரு பாவியின் கேள்வியும், 'தேவன் கரிசனை யுள்ளவரா?'

மரண பயத்தால் பிடிக்கப்பட்ட வர்களும் இதே கேள்வியைக் கேட்கின் றனர்.

கள்வர்களுக்குக் கொடுக்கப் பட்டதான தண்டனை இயேசுவுக்கும் கொடுக்கப்பட்டதே. உலகில் பக்தர் களும் தீயவர்களும் ஞானிகளும் அறிவிலிகளும் ஒரேவிதமாக நடத்தப் படுகின்றனரே.

கிறிஸ்து நம்முடனிருக்கிறார்

'உமக்குக் கவலையில்லையா' என்று கேட்ட சீஷர்களிடம் இரண்டு காரியங்களை இயேசு வெளிப்படுத்து கிறார்.

முதலாவது 'உங்கள் விசுவாசம் எங்கே?' என்ற கேள்வி. அதாவது "இந்தப் புயலிலும் இந்தப் படகிலும் நான் உங்களோடிருப்பது போதாதா?" என்பது தான்.

கவலை கஷ்டங்களில் அவதிப் படுகிற மக்கள் ஒருவரையொருவர் பார்த்து 'நாம் ஒரே வள்ளத்தில் சவாரி செய்கிறோம்' என்று சொல்வதுண்டு. ஆனால் நாம் பிரயாணம் பண்ணுகிற படகில் நம்மோடு இயேசு இருக்கிறார் என்கிற எண்ணம் இருக்கிறதா? நாம் அனுபவிக்கிற பாடுகள் எல்லாவற்றிலும் அவருக்கும் பங்கு உண்டு. அவர் உள்ளே யிருந்து கொண்டே சிக்கலான நிலை களை அறிகிறவர்.

பொய்க் குற்றச்சாட்டால் பல வருடங்கள் சிறையிலிருந்து விட்டு வந்த ஒருவரை நண்பர்கள் சந்தித்தபோது அவர் இவ்வாறு கூறினார், "இப்போது எனக்காக அனுதாபம் கொள்வதால் என்ன பயன்? நீங்கள் என்னோடு அந்த நரக வாழ்க்கையை அனுபவித்திருக்க வேண்டும்".

ஆம் ஆண்டவராகிய இயேசு தேவகுமாரன், ஆனால் நமக்காக அவர் சிலுவையில் மரித்தார். நமக்காகப் பாதாளத்துக்கு அவர் இறங்கிவிட்டார்.

தொல்லைகள் ஏன் வருகின்றன என்பது அறியப்படாதது. அது நம்மை விட்டு விலகிவிட விதிவிலக்குகளு மில்லை. அதைக் கேள்வி கேட்டு நாம் விடுவிக்கவும் முடியாது. அது கிறிஸ்து வின் வழியல்ல. ஆனால் பிரச்சனைகளின் மத்தியில் அவரது கிரியை வித்தியாச மானது. அது மிகவும் ஆச்சரியமானது. ஆனால் தொல்லைகள் வரும்போது அங்கு நானும் இருப்பேன் என்பது அவரது வாக்கு.

பாடுகளின் மத்தியில் கிறிஸ்துவன் பெற்றுக்கொள்ளும் பதில் யாது? அவர் அதற்கு விளக்கம் அளிக்கத் தேவை யில்லை. இருளின் பாதையிலெல்லாம் அவர் உங்களோடே இருக்கிறார். இருளின் அனுபவம் அவரோடு பரிசுத்த மானதாக மாறிவிடுகிறது. அதனால் சங்கீதகாரன் "நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல் லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்" சங்.23:4 என்று பாடுகிறார். இயேசுவே நீர் எனக்காகப் பரத்திலிருந்து அனுப்பப் பட்டிருக்கிறீர் என்று சொல்லுங்கள்.

தானியேலின் புஸ்தகத்தில் ஒரு அதிசய சம்பவத்தைப் பார்க்கிறோம். ஏழு மடங்கு வெப்பப்படுத்தப்பட்ட அக்கி னிச் சூளையில் சாத்ராக், மேஷாக், ஆபெத்நேகோ என்ற மூன்றுபேர் இடப் பட்டனர். ஆனால் தீவிரமாய் இருக்கை யிலிருந்து எழுந்து, "மூன்று புருஷரை அல்லவோ கட்டுண்டவர்களாக அக்கினி யிலே போடுவித்தோம். ..... இதோ நாலுபேர் விடுதலையாக அக்கினியின் நடுவிலே உலாவுகிறதைக் காண்கிறேன்" தானி.3:24-25. அந்த நாலாவது நபர் யார். அவரது சாயல் தேவபுத்திரனுக்கு ஒப்பா யிருந்தது - அவர் தேவகுமாரனே தான்.

தேவன் அக்கினியின் நடுவிலோ, புயலின் மத்தியிலோ குழப்பங்கள், வியாதிகளின் மத்தியிலோ நம்மைத் தனியாக விடுவதில்லை. தேவன் நம் நடுவிலிருக்கிறார். பயமே தேவை யில்லை.

இரையாதே அமைதலாயிரு

உங்கள் விசுவாசம் எங்கே என்று சீஷரிடம் முதலாவது கேட்ட அவர் இரண்டாவதாகக் கடலைப் பார்த்து, 'இரையாதே அமைதலாயிரு' என்றார் மாற்கு.4:39. இந்த வார்த்தை அவர் இயற்கைக்கு மேலாக வல்லமையுடன் செயல்பட்ட அதிசயத்தைக் காண்பித் தாலும் சீஷர்களுடைய இருதயத்தில் காணப்பட்ட பெரிய குழப்பத்தை மாற்றுவதாகவுமிருந்தது.

நமது தொல்லைகளில் தேவன் பங்கு கொள்ளுகிறவர். நமது இரு தயத்தைக் கிழிக்கும் ஒவ்வொரு முள் ளும் தேவகுமாரனுடைய இருதயத்தை யும் நோகப் பண்ணுகின்றன. மட்டுமல்ல நமக்குத் தேவை விடுதலை. அவர் புயத்திற்கு மேலாகத் தமது குரலை உயர்த்தி 'இரையாதே அமைதலாயிரு' என்று கட்டளையிட வேண்டும். இந்த அனுபவத்தை நான் பெற்றிருப்பது போல நீங்களும் பெறவேண்டும்.

நீங்கள் மனச்சோர்புற்றவர்களா யிருக்கலாம். உங்களைச் சுற்றி வாழும் உங்கள் மக்கள் உங்களைப்பற்றி அக்கரை யற்றவர்களாயிருக்கலாம். பயங்கரமான சந்தேகமோ, சோதனையோ உங்களை வாட்டி வதைக்கலாம். ஆனால் இப் போது "வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது" மத். 28:18 என்று கூறியவர் மீது நம்பிக்கை வையுங்கள். அவர் காற்றை அடக்கி, கடலை அமைதல் படுத்தி நமது பயங்களைத் தூளாக்கி உங்கள் வாழ்வு புயலுக்கும், பிரளயத் திற்கும் தப்பி சந்தோஷமடையச் செய்வார். அவர் உங்களோடுதான் பேசுகிறார்.

மக்கள் ஆச்சரியப்படுவார்கள். இதோ காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்பார்கள் மாற்கு 4:41.

இயேசுவே நான் உம்மை ஆராதிக்கிறேன், நீரே என் தேவனும் ஆண்டவருமாயிருக்கிறீர்.

மிக முக்கிய அறிவிப்பு

காலஞ்சென்ற எனது தகப்பனார் பாஸ்டர் **S. தேவதாசன்** அவர்கள் 1970-ம் ஆண்டு வருகையின் தூதன் பத்திரிகைக்காக இந்தியன் வங்கியில் ஒரு சேமிப்பு கணக்கு ஆரம்பித்திருக் கிறார்கள். 1991-ம் ஆண்டு வருகையின் தூதன் உதவி ஆசிரியராக என்னை நியமித்து, இந்தியன் வங்கிக்கும், தபால் அலுவலகத்திற்கும் கடிதம் கொடுத்தார்கள். 1999-ம் ஆண்டு வருகையின் தூதன் ஆசிரியராக என்னை நியமித்து, திரும்பவும் இந்தியன் வங்கிக்கும், தபால் அலுவலகத்திற்கும் கடிதம் கொடுத்தார்கள். இந்த இரண்டு கடிதங்களின் நகல் மட்டுமே என்னிடம் இருக்கிறது.

இந்த சூழ்நிலையில் 1970-ம் ஆண்டு ஆரம்பித்ததும், 1991-ம் ஆண்டு முதல் 2020 மேய் மாதம் வரை சுமார் 30 ஆண்டுகள் நான் இயக்கினதுமான இந்தியன் வங்கி கணக்கை முடக்கிப்போட்டார்கள். அந்த கணக்கில் இருக்கும் பணத்தை எடுக்க பிரயாசப்படுகிறோம். எனவே,

1. வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர் இந்தியன் வங்கிக்கு அனுப்பாமல் 2-ம் பக்கத்திலுள்ள **United Bank of India** வங்கிக்கு அனுப்பும்படி அதிக அன்பாய் கேட்கிறேன்.
2. காசோலை வழியாக காணிக்கை அனுப்புவோர் (Cheque & Draft) **வெஸ்லி தேவதாசன்** என்ற பெயருக்கு மட்டும் அனுப்பும்படி பட்சமாய் கேட்கிறேன்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

அனைத்தும் கிறிஸ்துவின் மகிமைக்காகவே

All for the glory of Chirist

Rich Carmicheal

ஒரு நாள் ஒரு பெரிய அசைவு ஏற்படப்போவதாக ஆண்டவர் எச்சரிக் கிறார். "இன்னும் ஒருதரம் நான் பூமியை மாத்திரமல்ல வானத்தையும் அசையப் பண்ணுவேன்" எபி.12:26. கொரோனா வைரஸ் மூலம் உலகம் எவ்வாறு அசைக் கப்பட்டுவிட்டது என்பதை நாம் காண்கி றோம். நமது வாழ்வு எவ்வளவு பலவீன மானது, நமது தேசங்கள் எவ்வளவு பலவீனமானவை. நமது பொருளாதாரம் எல்லாமே பெலவீனமானவைகள் என்றும் நம் வாழ்வு எவ்வளவு நிச்சய மற்றது என்றும் தெளிவாய் தெரிகிறது.

ஆனால் நமது "கர்த்தர் ஜலப் பிரவாகத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறார்; கர்த்தர் என்றென்றைக்கும் ராஜாவாக வீற்றிருக்கிறார்" சங். 29:10. அவர் எல்லா வற்றின்மேலும் அதிகாரமுடையவராய் தமது நித்திய திட்டங்களையும் நோக்கங் களையும் தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறார். இக்கட்டான நேரங் களிலும், "தேவனிடத்தில் அன்பு கூருகிற வர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்....." ரோமர் 8:28 என்ற உறுதியுடன் இருக்கமுடியும்.

மனந்திரும்பும் காலம்

நமது வாழ்வில் ஒரு கிருபையின் செயலைச் செய்ய வாய்ப்பு அளிக்கப்படு கிறது. இக்கொடிய நாட்களில் 2 நாளா. 7:13-14 வசனங்களின்படி நாம் நம்மைத் தாழ்த்தி, ஜெபித்து, அவர் முகத்தைத் தேடி, நமது பொல்லாத வழிகளைவிட்டு விலகும்படி அழைக்கிறார். நம்மிலுள்ள எந்தப்பாவமும், லௌகீகமும் நம்மை ஆட்கொள்ளாத படி கவனம் செலுத்த வேண்டியது இன்றைக்கும் என்றைக்கும் மிக முக்கியமானது. நம்மில் அனேகர் ஆதி அன்பிலிருந்து குன்றி வெதுவெதுப் பான நிலையை அடைந்துவிட்டோம். நமது தனிப்பட்ட வாழ்விலும் சபையின் வாழ்விலும் ஆவிக்குரிய திரட்சி, வல்லமை மற்றும் பிறரைப் பற்றிய கரிசனை இல்லை.

ஒரு எச்சரிப்பு மணி ஒலிக்க வேண்டிய காலம் இது. "நாம் நித்தி ரையை விட்டு எழுந்திருக்கத்தக்க வேளை யாயிற்றென்று நாம் காலத்தை அறியத் தக்கவர்களாய், இப்படி நடக்க வேண்டும்; நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப் பார்க்கிலும் இப் பொழுது அது நமக்கு அதிக சமீபமா யிருக்கிறது" ரோமர் 13:11 என்று அப்.பவு லும் "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமா யிற்று, ஆகையால் தெளிந்த புத்தியுள்ள வர்களாயிருந்து, ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்" 1 பேது.4:7-ல் பேதுருவின் வசனமும் எச் சரிக்கின்றன. மனந்திரும்புவது இன்றி யமையாதது. இயேசு கிறிஸ்துவின் ஊழி யம் இந்த அழைப்போடுதான் ஆரம்பித் தது மத்.4:17. கடைசி புத்தகமாகிய வெளிப் படுத்தல் வரைக்கும் இந்த அழைப்பு ஏழு சபைகளுக்கு எழுதப்பட்ட நிருபங்களி லும் வெளிப்படுகிறது. "நான் நேசிக்கிற வர்களெவர்களோ அவர்களைக் கடிந்து கொண்டு சிட்சிக்கிறேன், ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பு" வெளி.3:19, 2:5,16, 21-22, 3:3.

இது கிறிஸ்துவுக்காக சபை தன்னை ஆயத்தப்படுத்த வேண்டிய காலம். மேலும் தீத்து. 2:11-14 படிப்போம். 2 பேதுரு 3:14-ன் படி நாம், "கறையற்றவர் களும் பிழையற்றவர்களுமாய்ச் சமா தானத்தோடே அவர் சந்நிதியில் காணப் படும் படி ஜாக்கிரதையாயிருங்கள்." தொடர்ந்து எபி.12:1-2 படிப்போம். அற்ப காரியங்களை விட்டுவிட்டு நமது இருதயங்களை கிறிஸ்துவுக்கு நேராக முழுவதுமாகத் திருப்புவோம்.

கிறிஸ்துவே எல்லாமானவர்

நாம் அவரால் அவருக்காக சிருஷ் டிக்கப்பட்டவர்கள் (கொலோ.1:16) நாம் வாழுவது அவரது மகிமைக்காக மட்டுமே 1 பேது.1:19. "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர் களே." எனவே நாம் அவருடையவர்கள். நாம் அவருடைய சரீரத்தின் அவயவங் கள். அவர் நம்மை நேசித்து தம்மையே நமக்காக அளித்தவர் யோவா.14:3; 1 தெச.4:17.

எல்லாவற்றிலும் அவருக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் கொலோ.1:18. அவர் தேவனுடைய ஒரே பேறான குமாரன். அவர் குமாரனை தமது சுதந்தரவாளியாக நியமித்திருக் கிறார் எபி.1:2. "இருக்கிறவரும் இருந்த வரும் வருகிறவருமாகிய சர்வ வல்லமை யுள்ள கர்த்தர்; நான் அல்பாவும், ஒமேகாவும், ஆதியும் அந்தமுமாயிருக் கிறேன் என்று திருவுளம் பற்றுகிறார்" வெளி.1:8. "அவர் அதரிசனமான தேவனு டைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முதற் பேறுமானவர்", "அவர் எல்லாவற் றிற்கும் முந்தினவர்" கொலோ.1:15,17. "இவர் அவருடைய மகிமையின் பிரகாச மும், அவருடைய தன்மையின் சொரூப மாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்கு கிறவராய் ..... பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி ..... மகத்து வமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார்" எபி.1:3.

ஆதியில் அவர் தேவனோடிருந் தார் யோவா.1:3. முடிவும் அவரே, எல்லாவற்றிற்கும் மேலானவரும் அவரே. "ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படி ..... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" பிலி.2:9-11.

வாழ்வது கிறிஸ்துவே

இது நமது முழு கவனத்தையும் கிறிஸ்துவுக்கு நேராக திருப்பவேண்டிய காலம் பிலி.3:8-9; 1:21 ஆகிய வசனங் களை படியுங்கள்.

நாம் கிறிஸ்துவில் நமது பயபக்தி யைப் புதுப்பிக்கும் போது அவரது நற்பண்புகளால் நாம் நிரம்பி வழிய முடியும். அவரது ஜீவன், அன்பு, சமா தானம், சந்தோஷம், நீதி, உத்தமம், நீடிய பொறுமை, தாழ்மை, சாந்தம், தைரியம், உற்சாகம், விசுவாசம், கிருபை, மனதுருக் கம், பாசம், வெற்றி யாவும் நமக்கு சொந்த மாகின்றன. அவரது மகிமை நம் மூலமாகப் பிரதிபலிக்கும். அனேகர் நம்மிடம் இழுக்கப்பட்டு ஆண்டவரை அறிய ஏதுவாகும். அவரது வார்த்தையும் அவரது ஆவியின் வல்லமையும் நம்மில் தங்கி நமது வார்த்தைகளும் வாழ்வும் அவரது வருகைமட்டும் அவரை அறிவிக் கட்டும்.

இயேசு கிறிஸ்துவுக்கொப்பான சாயல்

A striking likeness of Jesus

Charles H. Spurgeon

ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவுக்கு ஒப்பான சாயலை உடையவனாயிருக்க வேண்டும். அவனுடைய தைரியத்தில் அவரைப் போலிருக்க வேண்டும். நீங்கள் பற்றிக்கொண்டிருக்கும் மார்க்கத்தைக் குறித்து வெட்கப்பட வேண்டாம். உங்கள் பணி உங்களை வெட்கப்படுத் தாது. இயேசுவைப் போல திட மனதா யிருங்கள். உங்கள் அன்பின் ஆவியில் அவரைப் போல நடந்து கொள்ளுங்கள். உங்கள் எண்ணம், பேச்சு, செயல் எல்லா வற்றிலும் தயவு வெளிப்படட்டும். அப்போது மக்கள் உங்களைக் குறித்து இவர்கள் இயேசுவோடிருந்தவர்கள் என்று கூறுவார்கள் அப்.4:13. தூய்மை யில் அவரைப் போல நடவுங்கள். அவர் பிதாவுக்காக எவ்வளவு வாஞ்சையுடன் செயல்பட்டாரோ அதேபோல நன்மை செய்து சுற்றி நடவுங்கள், சமயத்தை விரயம் செய்யாதீர்கள், அது மிக விலை யேறப்பெற்றது. அவர் தம்மைத்தான் வெறுத்து நடந்தது போல நீங்களும் நடவுங்கள். ஜெபத்தில் அவரைப் போல உறுதியாய்த் தரித்திருங்கள். அவர் பிதாவின் சித்தத்தை முழுவதுமாக நிறைவேற்றினது போல நீங்களும் நிறை வேற்றுங்கள். அவர் பொறுமையாயிருந் தது போல நீங்களும் பொறுமையைத் தரித்துக் கொள்ளுங்கள். எல்லாவற்றிற் கும் மேலாக உங்கள் சத்துருக்களுக்கு மன்னியுங்கள். சிலுவையில் தொங்கும் போது கூட பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்ன தென்று அறியாதிருக்கிறார்களே என்றா ரே. அது உங்கள் உள்ளத்தில் தொனிக் கட்டும். உங்களுக்கு மன்னிப்புக் கிடைக்க அவர்களுக்கு மன்னியுங்கள்.

* * * * *

(3-ம் பக்க தொடர்ச்சி)

லேயும், எங்களைத் தேவ ஊழியக் காரராக விளங்கப் பண்ணுகிறோம்" 2 கொரி.6:3.

எனது தகப்பனார் காலத்தில் **வருகையின் தூதன் பத்திரிகை** 18 இந்திய மொழிகளில், வெவ்வேறு ஆசிரியர்கள் மூலம் வெளியிடப்பட்டது. 'வைபை' என்கிற இந்திய மொழி ஒன்றில் எனது தகப்பனார் முழு வேதாகமத்தையும் அச்சிட்டு, அந்த மொழி பேசும் மக்கள் மத்தியில் போய் ஜெபத்தோடு வெளியிட்டார்கள்.

அந்த நாட்களில் எனது தகப்பனாரிடம் உதவி ஊழியராயிருந்த ஒரு சகோதரன் பிற்பாடு சென்னை சென்று, தற்போது பன்மொழி சபை போதகராயிருக்கிறார். அவர் தன்னுடைய **அழைப்பின் எதிரொலி** என்ற பத்திரிகையை 16 மொழிகளில் வெளியிடுகிறார். அவருடைய பத்திரிகையில் 2020 அக்டோபர் மாதம் அச்சிடப்பட்டிருந்த ஜெபக் குறிப்புகளை அப்படியே அச்சிடுகிறேன்:

தேவனிடத்தில் ஜெபியுங்கள்

நவம்பர் 04 : நமது இணை ஆசிரியர்கள் சகோதரர் M. பால்ராஜ் அவர்கள் மற்றும் அவரது குடும்பத்தார் மற்றும் சகோதரி செரினா பெவின் அவர்களுக்காகவும் அவரது குடும்பத்திற்காகவும் ஜெபியுங்கள்.

நவம்பர் 05: நமது ஆப்பிரிக்கான்ஸ் இணை ஆசிரியர் சகோதரி மரிட்ஜீ நெல்சன் அவர்களுக்காகவும் அவரது குடும்பத்திற்காகவும் மற்றும் உதவியாளர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

நவம்பர் 06: நமது உருது இணை ஆசிரியர் சகோதரர் சூரஜ் குமார் சண்டனி அவர்களுக்காகவும் அவரது குடும்பத்திற்காகவும் மற்றும் உதவியாளர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

நவம்பர் 07 : நமது மலையாளம் இணை ஆசிரியர் சகோதரர் பெஞ்ஜமின் மோசஸ் அவர்களுக்காகவும் அவரது குடும்பத்திற்காகவும் மற்றும் உதவியாளர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

நவம்பர் 08 : நமது தெலுங்கு இணை ஆசிரியர் போதகர் N. மோகன் பாபு அவர்களுக்காகவும் அவரது குடும்பத்திற்காகவும் மற்றும் உதவியாளர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

நவம்பர் 09 : நமது ஹிந்தி இணை ஆசிரியர் சகோதரி டாரத்தி தாமஸ் அவர்களுக்காகவும் அவரது குடும்பத்திற்காகவும் மற்றும் உதவியாளர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

நவம்பர் 10 : நமது கன்னடம் இணை ஆசிரியர் Rev. R. இராமகிருஷ்ணன் அவர்களுக்காகவும் அவரது குடும்பத்திற்காகவும் மற்றும் உதவியாளர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

நவம்பர் 11: நமது மராத்தி இணை ஆசிரியர் Rev. சஷி திவாரி அவர்களுக்காகவும் அவரது குடும்பத்திற்காகவும் மற்றும் உதவியாளர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

நவம்பர் 12 : நமது குஜராத்தி இணை ஆசிரியர் சகோதரர் பங்கஜ் வாடியா அவர்களுக்காகவும் அவரது குடும்பத்திற்காகவும் மற்றும் உதவியாளர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

நவம்பர் 13 : நமது பெங்காளி இணை ஆசிரியர் Rev. அஞ்சன் குமார் சிங் அவர்களுக்காகவும் அவரது குடும்பத்திற்காகவும் மற்றும் உதவியாளர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

நவம்பர் 14: நமது ஒடியா இணை ஆசிரியர் சகோதரி சுராமா சாமுவேல் அவர்களுக்காகவும் அவரது குடும்பத்திற்காகவும் மற்றும் உதவியாளர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

நவம்பர் 15 : நமது நேபாளி இணை ஆசிரியர் சகோதரர் புவன் பிரசாத் தெவ் கொடா அவர்களுக்காகவும் அவரது குடும்பத்திற்காகவும் மற்றும் உதவியாளர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

நவம்பர் 16: நமது சிங்கள இணை ஆசிரியர் Rev. ஸ்டீபன் ஜோசப் அவர்களுக்காகவும் அவரது குடும்பத்திற்காகவும் மற்றும் உதவியாளர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

நவம்பர் 17: நமது அசாமி இணை ஆசிரியர் திருமதி பொர்னாளி தபராஜ் அவர்களுக்காகவும் அவரது குடும்பத்திற்காகவும் மற்றும் உதவியாளர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

நவம்பர் 18 : நமது பஞ்சாபி இணை ஆசிரியர் சகோதரர் ஆசிஷ் அவர்களுக்காகவும் அவரது குடும்பத்திற்காகவும் மற்றும் உதவியாளர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

அன்பின் வேண்டுகோள்

நீங்கள் அறிந்தபடி, நம் ஊழியங்களுக்குரிய ஊழியர் சம்பளம், காகிதங்கள் வாங்குவது, பிரயாணங்கள் போன்ற மிக முக்கியமான அடிப்படைகளை சந்திக்க நம்மிடம் பணம் இல்லாமல் நெருக்கப்படுகிறோம். பொதுவாக நாம் யாரிடமும் பொருளாதாரத் தேவைகளைக் கேட்பதில்லை. எனவே, இந்த ஊழியங்களை உண்மையாய் நேசிக்கிறவர்கள் உங்களால் இயன்ற காணிக்கைகளை மணி ஆர்டர், காசோலை, டிமாண்ட் டிராப்ட், Phone Pay, NEFT போன்ற ஏதாவது வழிகளில் அனுப்பி உதவ வேண்டுகிறோம். ஏற்கெனவே உதவியவர்களுக்கு நன்றி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

– ஆசிரியர்,
அழைப்பின் எதிரொலி

* * * * * * * * *

எனக்கு மிகவும் அருமையான கர்த்தருடைய பிள்ளைகளே, "மற்ற பத்திரிகைகள் என்ன எழுதுகின்றன" என்பதை சில மாதமாக தொடர்ந்து எழுதி வருகிறேன், நீங்களும் வாசித்து வருகிறீர்கள். தயவுசெய்து வருகையின் தூதன் வாசகர்கள், இந்தியா டுடே (India Today) டைம்ஸ் ஆப் இந்தியா (Times of India) போன்ற உலக பத்திரிகைகளுக்கு "சந்தா" அனுப்புவது போல அனுப்பா தேயுங்கள்.

ஆறுதலின் தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

தேவ கிருபையும், பிரசன்னமும் உங்களோடிருப்பதாக.

உதவி : 9489740295
அலுவலகம் : 9543221008
சமயம் : 10-01; 02-06

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

தேவனுடைய பிள்ளைகளுக்கு நன்றி!

தேவனுடைய கிருபையால் அக்டோபர் மாதம் 15-ம் தேதி நடைபெற்ற மகள் W. சாரா மெலோடி, மணமகன் J. சேம் ஜெபக்குமார் திருமணத்திற்காக ஜெபித்த தேவனுடைய பிள்ளைகளுக்கு நன்றி.

– ஆசிரியர்

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

மரணம் நெருங்கி, கண்கள் இம்மைக்கு மூடி மறுமைக்குத் திறக்கும் **இறுதிவேளை**யில்தான் மனிதன் தெய்வீக சத்தியங்களைத் தெளிவாய் அறியக்கூடும்.

ஆவிக்குரிய **உண்மை**களை அறிந்து கொள்வதற்குரிய சிறந்த வழிகளில் ஒன்று **மரண** வேளையில் மக்கள் கூறியிருப்பதைக் கவனிப்பதேயாகும்.

ஜசுவரியமும் அந்தஸ்தும் **தீமை** செய்கிறவர்களுக்குத் துணையாயிருப்பதால் முழு **சபை**யுமே நிராகரிக்கப்படும் நிலையிலுள்ளன.

இன்று **சபை**கள் சாத்தானின் சிம்மாசனத்தின்மேல் சொகுசாக, **உலகத்** தை விட்டும் பிரியாமல் சொகுசாயிருக்கிறது.

கிறிஸ்துவின் சாயலற்ற **சபை**யின் செய்திகளை **உலகம்** செவி கொடுத்துக் கேட்பதில்லை.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason